Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 270
தேசிய தினசரி

[illegible] ஐப்பசி 23 ஷஃபான் 16 வெள்ளிக்கிழமை (8-11-68




# கப்பலில் வந்த சரக்கை இறக்குவதில் இழுபறி

## காங்கேசன் துறையில் 'ஜிப்சம்' காத்து நிற்கிறது

### தினசரி ரூபா 2000 நஷ்டம்

காங்கேசன்துறை, வியா.

காங்கேசன்துறைக்கு 'ஜிப்சம்' என்ற சிமெந்துக் கலவைக்குத் தேவையான ஒரு வகைக் கற்களை அவுஸ்திரேலியாவிலிருந்து ஏற்றிவந்த கப்பல் 4 நாட்களாக இவற்றை இங்கு இறக்குமதிசெய்ய முடியாத நிலையிலிருக்கிறது. இவற்றை இறக்குவதற்கு இன்னும் எத்தனை நாட்கள் செல்லுமோ என்பதும் தெரியாத நிலையிலிருக்கிறது.

9,745 தொன்நிறையுள்ள ஜிப்சத்தை ஏற்றிவந்துள்ள இக்கப்பல் யாழ்ப்பாணத் திலா காங்கேசன்துறையிலா இதனை இறக்குமதி செய்வது என்ற பிரச்னை இப்போது எழுந்துள்ளதைத் தொடர்ந்தே இவ்வித சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

சிமெந்து கூட்டுஸ்தாபனம் யாழ்ப்பாணத் துறைமுகத்தில் இந்த ஜிப்சத்தை இறக்கும்படி கப்பல் காப்டனிடம் விடுத்த வேண்டுகோளை காப்டன் மறுத்துள்ளார். கப்பல் ஏஜண்டுமாரின் உத்தரவின்படி காங்கேசன்துறை துறைமுகத்திலேயே தாம் இவற்றை இறக்குமதி செய்யமுடியுமென இவர் தெரிவித்து காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து இப்போது யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்குக் கடல் கொந்தளிப்பும் வேறுசில காரணங்களும் தடையாக இருப்பதாகவும் இவர் எடுத்துக் கூறியுள்ளார்.

காங்கேசன்துறைக்கடல் கொந்தளிப்புக் காரணமாக இக்கப்பலிலிருந்து ஜிப்சத்தைக் கரைக்குக்கொண்டு

(8-ம் பக்கம் பார்க்க)

## தலைமை பதவி ஏற்கும் முதல் தமிழர் இவர்

கொழும்பு, வியாழன்

தேசியமய சேவைகள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ராஜேந்திரா நிறைசேரிக் காரியதரிசியாகப் பதவியேற்கவிருக்கிறார். அரசாங்க சேவைத்தலைமைப் பதவியேற்கும் முதல் தமிழர் திரு. ராஜேந்திரா தான் எனக்கருதப்படுகிறது.

நிறைசேரிக்காரியதரிசியாகப் இப்போது பதவி வகிக்கும் திரு. ஜினதாச சமரக்கொடி உலக வங்கியின் பதில் டைரக்டராகப் பதவியேற்றுச் செல்லவிருப்பதால் அந்த இடத்துக்கு திரு. ராஜேந்திரா நியமிக்கப்படுகிறார்.

1934-ம் ஆண்டில் சிவில் சேவையில் சேர்ந்த திரு. ராஜேந்திரா அரசாங்கத்தின் பல்வேறு துறைகளிலும் பணியாற்றியிருக்கிறார்.

## வெற்றி பெற்ற நிக்ஸன் ஐஸனோவரை சந்தித்தார்

### அமெரிக்கர் ஒற்றுமையே தனது இலட்சியமாம்

வாஷிங்டன், நவ. 7

அமெரிக்காவின் 37-வது ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள குடியரசுக் கட்சி அபேட்சகரான திரு. ரிச்சார்ட் நிக்ஸனுக்கு உலகத் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி ஐஸனோவரை சந்திப்பதற்காக நிக்ஸன் வாஷிங்டன் வந்து சேர்ந்துள்ளார்.

அமெரிக்காவின் சரித்திரத்திலேயே ஜனாதிபதி தேர்தலில் இம்முறைதான் மிகக் கடுமையான போட்டியிருந்தது. புதிய ஜனாதிபதியாக நிக்ஸன் தேர்ந்தெடுக்கப்படுவாரா ஜனநாயகக்கட்சி அபேட்சகரான திரு. ஹம்ப்ரி தேர்ந்தெடுக்கப்படுவாரா என்று வாக்குகள் எண்ணப்படுகையில், எதுவும் நிச்சயிக்கப்பட முடியாமலிருந்தது. இலினாய்ஸ், கலிபோர்னியா, ஒஹியோ ஆகிய ராஜ்யங்களின் வாக்குகள் எண்ணப்பட்டதும், பலமணி நேரம் ஹம்ப்ரியுடன் சம நிலையிலிருந்த நிக்ஸன் ஹம்ப்ரியைவிட அதிகவாக்குகளைப் பெற்றார். முக்கியமான ராஜ்யங்களின் முடிவுகள் நிக்ஸனுக்குச் சாதகமாக இருந்ததும் திரு. ஹம்ப்ரி தனது தோல்வியை ஒப்புக்கொண்டு திரு. நிக்ஸனுக்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பினார். நிருபர்களிடம் தழுதழுத்த குரலில் மிகவும் கவலையுடன் பேசிய திரு ஹம்ப்ரி, ஜனநாயக கட்சியை பலம்பொருந்திய கட்சியாக அமைப்பதற்கு தாம் முயற்சி செய்யப்போவதாக தெரிவித்தார். மனித நீதிக்காகவும் சமாதானத்துக்காகவும் தாம் தொடர்ந்து சேவைசெய்யப் போவதாகவும் திரு. ஹம்ப்ரி கூறினார்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு மொத்தம் 538 தேர்தல்குழுவாக்குகளில் 270 தேர்தல் குழுவாக்குகளையாவது ஒருவர் பெற வேண்டும். இம்முறை தேர்தலில் பலமணி நேரம் பல ராஜ்யங்களின் வாக்குகள் எண்ணப்பட்ட போதிலும் இரு அபேட்சகர்களில் எந்த ஓர் அபேட்சகரும் வெற்றி பெறுவதற்கு வேண்டிய 270 தேர்தல்குழு வாக்குகளும் கிடைக்கும் என்பதற்கான அறிகுறி தென்படவில்லை. ஆயினும் கடைசியில் இலினாய்ஸ், கலிபோர்னியா, ஒஹியோ மாநிலங்களின் வாக்குகள் எண்ணப்பட்டதும் குடியரசுக்கட்சி அபேட்சகரான திரு. ரிச்சார்ட் நிக்ஸனுக்கு 287 தேர்தல்குழு வாக்குகள்

8-ம் பக்கம் பார்க்க

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன்

இன்று தெஹிவளையில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 219வது சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

முதல் பரிசு
34 T 0991 ரூ. 100,000
2-வது பரிசு
23 G 0712 ரூ. 40,000
3-வது பரிசு
37 Q 0521 ரூ. 10,000

தலா 788-40 சதம் பரிசு பெறும் 100 டிக்கட்டுகள்:-
38 Q 0533 46 G 0688

(8ம் பக்கம் பார்க்க)

### மேற்கு ஆசிய

## 'போர் அபாயத்தை தடுப்பதில் முக்கிய கவனம் செலுத்துவேன்'

### திரு. நிக்ஸன் அறிவிப்பு

வாஷிங்டன், நவ. 7

மேற்கு ஆசியாவின் போர் அபாயத்தைத் தடுப்பதில் முக்கிய கவனம் எடுக்கப் போவதாக அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு நிக்ஸன் இன்று தெரிவித்தார்.

உலக அமைதிக்காக எந்தெந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ அவைகளையெல்லாம் செய்யத் தான் தயாராக இருப்பதாக திரு நிக்ஸன் இன்று வெளியிட்ட தமது முதலாவது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

வியட்நாம் யுத்தத்துக்கு தீர்வு ஏற்படுத்துவதற்கு சகல ஒத்துழைப்பையும் தான் அளிப்பேனென்றும் தெரிவித்துள்ளார்.

மேற்கு ஆசியாவே போர் அபாயத்தை எதிர்நோக்கி கொண்டிருப்பதால் அதற்கே முக்கியத்துவம் கொடுத்து தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## "சகல உபதபால் நிலையங்களுக்கும் தொலைபேசி வசதி வேண்டும்"

### ஆட்சி மன்றத்தில் பண்டிதர்

கொழும்பு, வியா.

"சகல உபதபால் நிலையங்களுக்கும் தொலைபேசி வசதியும் தபால்களை வீடுவீடாகக் கொண்டுசென்று விநியோகிக்கும் வசதியும் அரசாங்கம் உடனடியாகச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவரையில் தபாலதிபர் அலுவலக பணத்தை வேறெந்தத் தேவைக்கும் செலவுசெய்யக் கூடாது"

நேற்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் தனி நபர் பிரேரணை மீது பேசுகையில் ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா.பொ. இரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தப் பிரேரணை மீது திரு கா. பொ. இரத்தினம் பேசுகையில் சமுதாயத்தின் அபிவிருத்திக்கு முக்கியமாக கிராமப் புறங்களில் தபால் தொடர்பு விஸ்தரிப்பு அபி

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் மேன்மைக்காக தலைவர்கள் ஒற்றுமை தேவை

## தேர்தலில் தோல்வியுற்ற ஹம்ப்ரி கருத்து

வாஷிங்டன், நவ. 7

அமெரிக்காவின் 37 வது ஜனாதிபதியாக குடியரசுக் கட்சி அபேட்சகர் திரு ரிட்சார்ட் நிக்ஸன் வெற்றி பெற்றதை வாழ்த்தி அவருடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்த ஜனநாயக கட்சி அபேட்சகர் திரு. ஹம்ப்ரி அனுப்பியிருக்கும் செய்தியில் இரு கட்சிகளின் தலைவர்களும் ஒற்றுமையாகக் காரியங்கள் செய்தால் அமெரிக்காவின் மேன்மை அதிகரிக்கும் என்று தெரிவித்திருக்கிறார்.

திரு. ஹம்ப்ரியின் வாழ்த்துக்கு நன்றி தெரிவித்த திரு. நிக்ஸன் நெருக்கமான ஒரு போட்டியில் தோல்வியடைந்தால் மனம் என்ன நிலையில் இருக்கும் என்பதை தான் உணர்ந்ததாகக் குறிப்பிட்ட நிக்ஸன் 1960ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் திரு. ஜோன் எவ் கென்னடியுடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்ததை நினைவு கூர்ந்தார்.

திரு. நிக்ஸன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை குறித்துப் பாராட்டி இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்தார். காங்கிரஸ் அக்ராசனர் திரு நிஜலிங்கப்பா வாழ்த்துத் தெரிவிக்கையில் திரு. நிக்ஸனின் வெற்றி நாடுகளுக்கிடையில் நல்லெண்ணத்தை வளர்க்க உதவவேண்டுமென்றார்.

இந்தோனேஷிய வெளிவிவகார அமைச்சர் திரு. ஆதம் மாலிக் அபிப்பிராயம் தெரிவிக்கையில் இந்தோனேஷியாவுடனான அமெரிக்க உறவில் மாற்றம் எதுவும் ஏற்படாது என்று நம்பிக்கை தெரிவித்தார். ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைநகரான கெய்ரோவில் யார் வெற்றி பெற்றாலும் வித்தியாசம் என்ன இருக்கிறது என்று அரசாங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

சைகோனில் நிக்ஸன் வெற்றி குறித்து உயர் அதிகாரிகள் மகிழ்ச்சி தெரிவிக்கவில்லை. சோவியத் பத்திரிகையான 'டாஸ்' நிக்ஸன் பற்றிய செய்தியை மட்டும் வெளியிட்டிருந்தது. அபிப்பிராயம் எதையும் வெளியிடவில்லை. பிரிட்டிஷ் பிரதமர் வில்சன், பிரஞ்சு அதிபர் ஜெனரல் டிகோல் ஆகியோரும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

## 5 ஆபிரிக்கருக்கு ஆயுட் சிறை

சாலிஸ்பரி, நவ. 7

ஆயுதங்களுடன் நாட்டுக்குள் நுழைந்தார்களென்ற குற்றச் சாட்டின் மீது 5 ஆபிரிக்க தேசிய வாதிகளுக்கு ரொடீஷிய நீதிமன்றமொன்று நேற்று ஆயுட்காலச் சிறைத் தண்டனை விதித்தது.

## பாடசாலை கட்டடம் திருத்தம்

ஊர்காவற்றுறை, வியா.

1962-ம் வருடத்திலேற்பட்ட புயலினால் தரைமட்டமாக்கப்பட்ட சரவணை றோமன் கத்தோலிக்க பாடசாலையை மீண்டும் திருத்திக் கட்டுவதற்கான நடவடிக்கை இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது சம்பந்தமாக இவ்வூர் மக்களும் நாரந்தனை, சரவணை இளைஞர் முன்னேற்றக் கழகத்தலைவருக்கும் தொடர்பு கொண்டிருந்ததைத் தொடர்ந்து தீவுப்பகுதி எம்.பி. திரு வி. நவரத்தினம் எடுத்துள்ள நடவடிக்கைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சில உத்தரவாதங்கள் கேட்கிறது சைகோன்

### பாரிஸ் மகாநாட்டை கூட்ட தொடர்ந்து முயற்சி

சைகோன், நவ. 7

சில உத்தரவாதங்கள் அளிக்கப்பட்டால் வியட்நாம் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான பாரிஸ் மகாநாட்டில் தென்வியட்நாம் கலந்து கொள்ளுமென்று தென்வியட்னாம் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

வடவியட்நாம் மீதான குண்டுவீச்சை அமெரிக்கா நிறுத்திக்கொண்டதைத் தொடர்ந்து, வியட்னாம் பிரச்னைக்கு ஒரு தீர்வுகாணுமுகமாக பாரிஸில் நடைபெறும் மகாநாட்டை பரந்த அடிப்படையில் பிரச்னையில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் கொண்டதாக நடத்துவதற்குச் செய்யப்பட்ட முயற்சியில் முட்டுக்கட்டை ஏற்பட்டதால், நேற்று நடைபெறவிருந்த பாரிஸ் மகாநாடு ஒத்தி வைக்கப்பட்டது. ஆயினும் முட்டுக்கட்டையை நீக்கி மகாநாட்டை விரைவில் கூட்டவும் பிரச்னையில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளச் செய்யவும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்வியட்னாமில் ஆட்சி பீடத்திலுள்ள தியூ அரசாங்கம் அமெரிக்காவின் பொம்மையென்றும் வியட்னாம் மக்களைப்பற்றிப் பேசுவதற்கு அந்த அரசாங்கத்துக்குத் தகுதியில்லையென்றும் வடவியட்னாம் தெரிவித்து வியட்நாம் பற்றிய பேச்சுவார்த்தைகளில் வியட்காங்கியரான தேசிய விடுதலை முன்னணியினரே கலந்துகொள்ளத் தகுதியுடையவர்கள் என்றும் அறிவித்திருந்தது.

பேச்சுவார்த்தைகளில் வியட்காங்கினர் தனியொரு பிரிவினராகக் கலந்துகொள்வதைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் வடவியட்நாம் குழுவில் ஒரு பிரிவாக அவர்கள் கலந்து கொள்ளலாமென்றும் தென்வியட்நாம் தெரிவித்தது.

இந்த முட்டுக்கட்டையை அகற்றி சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளச் செய்வதற்கு இப்போது புதிய யோசனை ஒன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடவியட்னாமியரும் வியட்காங்கியரும் ஒரு தரப்பிலும் தென்வியட்நாமியரும் அமெரிக்கரும் மறுதரப்பிலும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளலாம் என்பதே புதிய யோசனையாகும்.

பாரிஸ் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்குத் தாமதம் ஏற்படுவதற்கு அமெரிக்காவே பொறுப்பேற்கவேண்டுமென்று வடவியட்நாமியர் தெரிவித்திருக்கின்றார்.

### சண்டை நீடிப்பு

வடவியட்நாம் மீதான குண்டுவீச்சு நிறுத்தப்பட்ட போதிலும் தென்வியட்நாமுக்குள் தொடர்ந்து சண்டை நடைபெற்றுவருகிறது. நேற்று சைகோனுக்குச் சமீபத்தில் வியட்காங்கியர் ஒரு பாலத்துக்கு வெடி வைத்து தகர்த்ததில் நான்கு அமெரிக்கசிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

மத்றேலிடத்தில் வியட்காங்கர்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 29 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர்.

## குறை நீங்கியது

சங்கானை, வியா.

கனகராயன்குள மகாவித்தியாலயத்தில் கணிதம் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாத குறை இம்மாதத் தொடக்கத்திலிருந்து நீங்கியுள்ளது. கணித ஆசிரியையாகத் தெரிவு செய்யப்பட்ட செல்வி பொ. இரஞ்சிதமலர் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் இம்மகாவித்தியாலயத்திற்கு கணித ஆசிரியையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆங்கில விஞ்ஞான ஆசிரியர்களையும் நியமித்து அடுத்த ஆண்டு முதல் பாடசாலையின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு அதிபர் மு. லோகநாதம் முயற்சி எடுத்து வருகிறார்.

## இன்னமும் குறைந்தபாடில்லை

அளவெட்டி, வியா.

சிலகாலமாக சிறுபிள்ளைகளைப் பாதித்துவரும் வயிற்றோட்ட நோய் காங்கேசன்துறைப் பகுதியில் இன்னமும் குறைந்தபாடில்லை.

காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் தற்சமயம் இந்நோய் காரணமாக பதினைந்து சிறுபிள்ளைகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இக் குழந்தைகளுக்குச் சிகிச்சை அளிப்பதில் காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரி வைத்தியர்கள் தீவிர கவனமெடுத்து வருகிறார்கள்.

## சர்வதேச மாணவர் நிலையம்

கொழும்பு, வியா.

உள்நாட்டு வெளிநாட்டு மாணவர்களைக் கொண்ட சர்வதேச மாணவர் நிலையமொன்றை அமைக்கும் திட்டம்பற்றி நேற்றுக் கூடிய அரசாங்க ஆட்சிமன்றக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பிரசுரங்கள் புத்தகங்களைக் கொண்ட நூல்நிலையங்களை அமைப்பதென்றும் புத்த சமய வளர்ச்சிக்கான வேலைகளைச் செய்வதென்றும், இந்நிலையம் ஆரம்பத்தில் கண்டியில் அமைப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

## காங்கேசன்துறையில் மலேரியா

அளவெட்டி, வியா.

காங்கேசன்துறைப் பகுதியில் மலேரியா நோய் அதிகரித்து வருகிறது.

காங்கேசன்துறை ஆஸ்பத்திரி வைத்திய பரிசோதனையில் பத்தொன்பது பேருக்கு மலேரியா காணப்பட்டதாகவும் தற்சமயம் இந்நோய் காரணமாக எட்டு நோயாளர் சிகிச்சைபெற்று வருவதாகவும் சொல்லப்படுகிறது.

## ஆண்டு விழா

உடுவில், வியா.

இலங்கை கபரோக நிவாரண தேசிய சங்க வலிகாமம் மேற்குக் கிளையின் 11வது ஆண்டு நிறைவுவிழா இம்மாதம் 12-ம் திகதி மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. இவ்விழாவில் பேராசிரியர் டாக்டர் ஏ. சின்னத்தம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## ஒக்டோபர் புரட்சி வைபவத்தில் சீன ராஜதந்திரிகள் வெளிநடப்பு

மாஸ்கோ, நவ. 7

சோவியத் புரட்சியின் 51-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி கிரெம்ளினில் நடைபெற்ற கொண்டாட்டமொன்றில் சோவியத் யூனியனின் முதலாவது உதவிப் பிரதமர் பேசுகையில் சீனாவைக் குறிப்பிட்டதை ஆட்சேபித்து அவ்வைபவத்தில் கலந்து கொண்ட சீனத்தூதரக அதிகாரிகள் இருவர் அங்கிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தைப் பிளவுபடுத்துவதில் சீனாவின் அவமானச் செயல் என்று சோவியத் யூனியனின் முதலாவது உதவிப்பிரதமர் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

இதை ஆட்சேபித்தே சீன ராஜதந்திரிகள் இருவரும் வெளிநடப்புச் செய்தனர்.

## படைபலத்தை இரட்டிப்பாக்க பாகிஸ்தான் நடவடிக்கை

புதுடில்லி, நவ. 7

பாகிஸ்தான் ராணுவ பலம் இரட்டிப்பாக்கப்பட்டிருக்கிறது. அதன் முதற்கட்டமாக நடப்பு வருடத்தில் 80,000-ல் இருந்த இராணுவம் 200,000 ஆக அதிகரிக்கப்பட்டிருப்பதை லண்டன் ஆதாரமான நிலையமொன்று தனது அறிக்கையில் தெரிவிக்கிறது. பாகிஸ்தானிய ராணுவ பல விஸ்தரிப்பு சம்பந்தமாக தொடர்ந்து அது தெரிவிப்பதாவது:

"பாகிஸ்தான் படைபலத்துக்கான அதன் செலவினங்கள் இந்தியாவைவிட அதிகரித்திருக்கின்றன. அதன் படைப் பெருக்கத்துக்கு உதவ இத்தாலியுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி 47 பற்றன் டாங்கிகளை இத்தாலி வழங்கவிருக்கிறது.

## அம்மானில் அமைதி

அம்மான், நவ. 7

ஜோர்டானின் நிலைமை கட்டுக்கடங்கி விட்டதாகவும் அமைதி நிலவுவதாகவும் ஜோர்டான் மன்னர் ஹுசைன் தெரிவித்தார்.

ராணுவத்தினருக்கும் அகதிகளுக்குமிடையில் இரண்டு தினங்களாக நடைபெற்ற தெருச் சண்டையைத் தொடர்ந்து அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

தளபதிகள் என்று சிலசதிகாரர்கள் தான் சண்டையில் இறங்கியதாக மன்னர் தெரிவித்தார். இச் சண்டையில் 29பேர் மாண்டனர். 100 பேர் காயமடைந்தனர்.

## இலங்கைக்கு பிரிட்டிஷ் ரயில் என்ஜின்கள்

லண்டன், நவ. 7

பிரிட்டிஷ் நீராவி ரயில் என்ஜின்கள் மூன்று அடுத்த மாத இறுதியில் கொழும்புக்கு வரவிருக்கின்றன. இலங்கை அரசாங்க ரயில்வே ஒரு பிரிட்டிஷ் நிறுவனத்திற்குக் கோரிக்கை விடுத்துள்ள மொத்தம் 28 என்ஜின்களின் முதற்பகுதியாக இம் மூன்றும் இங்கு இறக்குமதியாகும்.

28 ரயில் என்ஜின்களினதும் மொத்தப் பெறுமதி 750,000 பவுண்களாகும். அடுத்த 12 மாதங்களில் ஏனைய 25 என்ஜின்களும் படிப்படியாக இறக்குமதியாகும்.

580 குதிரைச் சக்தியும், 43 1/2 தொன் எடையும் உள்ள இந்த ரயில் என்ஜின்கள் மணிக்கு 26 மைல் வேகத்தில் செல்லவல்லன. சரக்குப் பெட்டிகளைப் [illegible] இவை பயன்படுத்தப்படும்.

## பஸ்பிரயாணிகள் கஷ்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த சில நாட்களாக நிலவிவரும் சீர்கேடான பஸ் சேவைகாரணமாக சண்டிலிப்பாய், கீரிமலை பஸ் பிரயாணிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகிவருகிறார்கள். இப்பிராந்தியங்களின் ஊடாக ஓடும் ஒன்று பழுதடைவது வழக்கமாகி விட்டதாம்.

சண்டிலிப்பாய் சேர்ந்தாங்குள பஸ்பிரயாணிகள் சங்கம் இதுசம்பந்தமாக எடுத்த முயற்சி இதுவரை பலனளிக்கவில்லையாம். (த.நி)

## ஆசிரியரின்றி ஜி. ஸி. ஈ. மாணவர் கஷ்டம்

புலோலி, வியாழன்

இவ்வருடம் டிசம்பர் மாதம் நடைபெறும் ஜி. ஸி. ஈ. பரீட்சை எடுக்கும் மாணவர்கள் பலர் போதிய ஆசிரியர்களின்றித் தவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் விஞ்ஞானம், தூயகணிதம் கற்பித்துவந்த ஆசிரியர்கள் மாற்றப்பட்ட பின் கடந்த ஒரு வருடமாக அவர்களுக்குப் பதில் எவரும் மாற்றலாகி வரவில்லையாம். ஆகவே விஞ்ஞானம், தூயகணிதம் போதிக்க ஆசிரியர்கள் இன்றி இம்மாணவர்கள் கஷ்டமடைகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுருக்கம்

## விவசாயிகள் குடியேற்றம்

திருமலை, வியா

மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம் மாவட்டத்தில் முள்ளிக்குளம் திட்டத்தின் கீழ 180 கமக்காரர்களைக் குடியேற்ற காணி அமைச்சு தீர்மானித்துள்ளது. இவர்களில் 133 விவசாயிகள் முள்ளிக்குளம் திட்டத்தின் கீழ் குடியேற்றப்படுவர். ஒவ்வொரு விவசாயிக்கும் 3 ஏக்கர் வயல் நிலமும் 1 ஏக்கர் மேட்டு நிலமும் வழங்கப்படும். மிகுதி 47 விவசாயிகளும் குரைக் குளத்திட்டத்தின் கீழ் குடியேற்றப்படுவர். இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே 53 குடியேற்றவாசிகள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

## மின்சார விநியோகம்

கொழும்பு, வியா

1969-ம் ஆண்டு முடிவிற்குள் 300 கிராமங்களுக்கு பூரண மின்சார வசதி அளிப்பதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இத்திட்டம் குறிப்பிட்ட கால எல்லைக்குள் முடிவடையக் கூடிய விதத்தில் ஆவன செய்யுமாறு அரசாங்க மின்சார இலாகா சகல அரசாங்க அதிபர்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## நான்கு நெற்களஞ்சியங்கள்

அம்பாறை, வியா

இந்த நிதியாண்டில் மட்டக்களப்பு, பொலநறுவை, அனுராதபுரம், மொனராகலை ஆகிய நான்கு இடங்களில் மிகப் பெரிய நெற்களஞ்சியங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. கடந்த இரு வருடங்களாக பிரஸ்தாப பகுதிகளில் அதிகரித்துக் கொண்டுவரும் நெல் விளைச்சலை அவதானித்தே இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டதென்று கமத்தொழில் சேவை இலாகாவைச் சேர்ந்த அதிகாரி தெரிவித்தார்.

## சான்றிதழ் தேவையில்லை

கொழும்பு, வியா

இலங்கையிலிருந்து அயல் நாடுகளுக்குக் குடியேறும் நபர்கள் தமது பென்ஷன், மற்றும் பிரவிடண்ட் நிதி பணத்தை எடுத்துச் செல்ல அந்நிய செலாவணி சான்றிதழ் பெறத் தேவையில்லை. இவ்வாறு நிதியமைச்சின் நிரந்தரக் காரியதரிசி இலங்கை வறமிகியர் சமூக சம்மேளன தலைவர் திரு. எஸ். ஜே. வி. சொக்மனுக்கு அறிவித்துள்ளார்.

## 1 லக்சத்தில் தமிழ் பாடசாலை

இறக்குவானை வியா

பலாங்கொடைக் கோட்டத்தைச் சேர்ந்த கோறளைத் தமிழ்ப் பெற்றோர் பாது காவலர் சங்கத்தின் முயற்சியால் 20 ஆயிரம் ரூபா செலவில் 3 ஏக்கர் காணி ராசக் கொம்பனிக்குப் போகும் வழியில் உள்ள இடத்தில் வாங்கப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில், விஞ்ஞான கூடம் உட்பட சகல வசதிகளுடன் கூடிய உயர்தர கல்லூரி ஒன்று அமைப்பதற்கு கல்வியமைச்சின் அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. பலாங்கொடை தமிழ் வித்தியாலயம் என்ற பெயரில் கட்டப்படவிருக்கும் இக் கல்லூரிக்கு சுமார் ஒருலட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## நிபுணர்கள் ஆராய்கின்றனர்

கொழும்பு, வியா

இருதயம் பொருத்தும் சத்திர சிகிச்சை செய்வது பற்றி கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் உள்ள சத்திர சிகிச்சை நிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர். இலங்கையில் இருதயமாற்றுச் சிகிச்சை செய்வதற்கு முன்பு இருதய சத்திர சிகிச்சை செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## தென்னம்பசளை நிலையம்

மட்டக்களப்பு, வியா

மட்டக்களப்பில் தென்னம் பசளை நிலைய மொன்றினை அமைப்பதற்கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா செய்து வருகின்றார். தென்னை மரங்கள் அதிகமாகவுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் பசளை நிலையம் ஒன்று இல்லாதது பெருங்குறையாக இருந்து வருகிறது.

## மழையில் நனைகின்றனர்

மாத்தளை, வியா

நோயாளிகளைப் பார்ப்பதற்காக மாத்தளை அரசினர் வைத்தியசாலைக்கு வரும் உறவினர்களும், நண்பர்களும் நவம்பர் 1-ம் தேதி முதல் மழையில் நனைந்து வெளியே நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது காலவரை நேரம் வரும்வரைக்கும் தங்குவதற்காகக் தங்குமிடமொன்றிக்கப்பட்டது. ஆனால் வெளிக் கதவு இப்போது மூடப்படுவதால் உள்ளே சென்று தங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## கடுகதி சேவை இல்லை

மட்டக்களப்பு, வியா

மட்டக்களப்பு-கொழும்பு கடுகதி புகையிரதசேவை இந்த நிதியாண்டிலும் கிடைக்காது என அச்சம் தெரிவிக்கப்படுகிறது. கடந்த 12 வருடங்களாக கிழக்கிலங்கை எம்பிக்கள் இதுபற்றி ஆட்சி மன்றத்தில் பேசிவந்திருக்கின்றனர். இவ்விஷயமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என புகையிரத இலாகா அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

## ஆஸ்பத்திரிபற்றி புகார்

கொழும்பு, வியா

தம்பலகாமம் ஆஸ்பத்திரியின் சீர்கேட்டை நிவர்த்தி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல்சேனநாயக்காவைமூதூர் இரண்டாவது எம்.பி திரு. ஜனாப் அப்துல் மஜீத் கேட்டுள்ளார்.

## ரகசிய மகாநாடு

மன்னார், வியா

உத்தேச வேலைநிறுத்தம் அமுலுறுத்தல் பற்றியரகசிய மகாநாடு ஒன்று மன்னார் மாவட்ட அதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்றது. பொது வேலைநிறுத்தம் ஏற்படும் போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி இம் மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்டதாக அறியப்படுகிறது

## பட்டினசபைத்தேர்தல்

மன்னார், வியா

டிசம்பர்மாதம் இறுதியில் நடைபெறவிருக்கும் மன்னார் பட்டினசபைப் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரை 20 பேர் தங்கள் கட்டுப்பணத்தைக் கட்டியுள்ளனர். நியமனப் பத்திரங்கள் இம் மாதம் 7ந்தேதி மன்னார் பட்டினசபை மண்டபத்தில் மன்னார் உதவித் தேர்தல் அதிகாரியால் ஏற்றுக் கொள்ளப்படும்.

## நீரில் மூழ்கி மரணம்

மன்னார், வியா

ஆற்றில் நீந்திக் குளித்துக்கொண்டிருந்த ராணுவ வீரர் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக மரணமானார். அவரின் சடலம் பலமணிநேர தேடுதலின் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டது. சிலாவத்துறை ராணுவ முகாமைச் சேர்ந்த ஏ. எம். சந்திரசேன என்ற இந்த வீரர் தனது நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருந்தபோது இச் சம்பவம் நடந்தது.

## நீர்ப்பாசன வசதி

நிந்தாவூர், வியா

அம்பாறை மாவட்டத்தின் கல்லோயாப் பள்ளத்தாக்கு வலதுபுறப் பிரதேசத்தில் நீர்ப்பாசன வசதிகள் அளிக்கக்கூடிய ஒரு புதிய திட்டத்தை ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திசபையின் கல்லோயாத் திட்டப்பகுதி ஆரம்பித்திருக்கிறது. இது சம்பந்தமாக 30 நீர்ப்பாசன பொறியியல் நுட்ப உத்தியோகத்தர்கள் இந்தப் பகுதியில் [illegible]

---

## இன்றைய பலன்

8-11-68

ஐப்பசி 23 உ

வெள்ளிக்கிழமை

திதி- திருதியை. பகல் 3-45 மேல் சதுர்த்தி.

நட்சத்திரம்- மிருகசீரிடம்.

ராகுகாலம் - 10-35—12-05.

சுபநேரம் - 6-05—7-35.

இன்று பிறந்தவர்களுக்கு புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். பிரமச்சாரிகள் வாழ்க்கையில் காதல் துளிர்விடலாம். குடும்பத்தில் கொண்டாட்டங்கள் இடம்பெறும். டாக்டர்கள் போற்றப்படுவர். ஆசிரியர்களுக்கும் நல்ல வாய்ப்புண்டு. முடிந்தவரை தனி வழி நாட்டத்தையும், இராப் பயணத்தையும் தவிர்த்துக் கொள்ளவும். போக்குவரத்தில் கோளுள் தழுவக்கூடும். மிகவும் பாதுகாப்பாக இருக்கவும்.

மேஷம்- நினைவின் நிழலாட்டம், நிம்மதி பறக்கும்.

ரிஷபம்- அன்னையின் ஆணை, அமைதிக்கு வழி.

மிதுனம்- பனிமலர்ப் பார்வை, பகைவின் உதவம்.

கடகம்- ஆயுத பலம், அவசரம் வேண்டாம்.

சிம்மம்- தாம்பத்தியம் சிறக்கும், தனமும் சேரும்.

கன்னி- சிந்தையில் குழப்பம், சிறிய தலையிடி.

துலாம்- வாழ்வில் வசந்தம், வழியும் பிறக்கும்.

விருச்சிகம்- நல்ல இருப்பம், தவைக்கள் பெருகும்

தனுசு- இதயக் கமலம், இன்பத்தால் மலரும்.

மகரம்- கனக்கும் நெஞ்சம், கவலையின் தாக்குதல்.

கும்பம்- குமுறும் நெஞ்சம், குறை படைக்க நேரிடும்.

மீனம்- குடும்பம் சிறக்கும், செல்வாக்கும் பெருகும்.

— சோதிடக் கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

---

# நெடுந்தீவு பொலிஸ் நிலைய திறப்பு விழா ஒத்திவைப்பு

நெடுந்தீவு, வியா

பல வருடங்களாக எதிர் பார்க்கப்பட்டிருந்த நெடுந்தீவு பொலிஸ் நிலையத் திறப்பு விழா மீண்டும் அடுத்தவருடம் ஜனவரி மாதம் வரை பிற் போடப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இங்கு பொலிஸ் நிலையத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கட்டிடம் திருத்த வேண்டி இருப்பதே பொலிஸ் நிலைய அமைப்புப் பின் போடப்பட்டுள்ளதற்கு காரணமென அறியப்படுகிறது.

# குடியேற்ற திட்டவாசிகளுக்கு கிணறுகள் கிடைக்கும்

அளவெட்டி, வியாழன்

அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட கிராமசபி விருத்திக் குடியேற்றத் திட்டங்கள் நல்ல முறையில் செயல்பட உடனடியாக அக் குடியேற்றத்திட்டங்களில் கிணறுகள் வெட்டி நீர் வசதி செய்வதற்கு ஏற்ற நடவடிக்கை எடுப்பதென வலி வடக்கு காரியாதிகாரி அத்தோலிக் பசும். மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற ஒரு ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் வலிகாமம் வடக்கு பகுதியில் உள்ள கிராமசேவகர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

தையிட்டி, கீரிமலை ஆகிய பகுதிகளிலுள்ள குடியேற்றத்திட்டங்களில் இக் கிணறுகள் கட்டுவதற்கான கேள்விப் பத்திரங்கள் உடனடியாகக் கோருவததென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தையிட்டியிலுள்ள ஒரு குடியேற்றத் திட்டம் கிணறுகள் இல்லாததால் வெகுவாகப் பாதிக்கப்பட்டு இக்குடியேற்ற வாசிகள் குடிபெயர்ந்துசென்றுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

"கோணேசர் ஆலயப்பகுதியை

# புனித நகராகப்பிரகடனப் படுத்தி இராணுவத்தை உடன் வெளியேற்றுக"

## உடுவில் கிராமசபை தீர்மானம்

உடுவில், வியாழன்

"திருக்கோணமலைக் கோணேசர் ஆலயப்பகுதியைப் புனித நகராகப் பிரகடனப் படுத்தி 'பிரடரிக்' கோட்டைக்குள் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினரை உடன்வெளியேற்ற ஆவன செய்யவேண்டும் என பிரதமர் டட்லி சேனநாயக்காவை இச்சபை வேண்டிக் கொள்கிறது.

இவ்வாறு கோரும் தீர்மானம் உடுவில் கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. சபைமண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் தலைமை வகித்தார்.

அரசாங்கத்திடமிருந்து பெற்ற விவசாயக் கடனைத் திருப்பிக் கொடுக்காத விவசாயிகளின் அரிசிப்பங்கீட்டுப்புத்தகத்தைப் பறிமுதல் செய்வது விவசாயிகளின் ஜீவாதாரத்தையே பாதிக்குமாதலால் அரிசிப்பங்கீட்டுப் புத்தகத்தை அபகரிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தைக் கைவிட்டு, பதிலாக விவசாயிகள் பெற்ற கடனை திருப்பிக்கட்ட அவகாசம் அளிக்கப்படவேண்டுமென்றும், காலக்கெடுவினுள்ளும் பணத்தை கட்டத் தவறியவர்களிடமிருந்து கட்டுறவு விதிகளுக்கமைய கடனை அறவிடவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இச்சபை நிர்வகித்துவரும் இலவச ஆயுர்வேத வைத்தியசாலைக்கு ஓர் உதவியாளரை ஆயுர்வேதக் கமிஷனரின் சுற்று நிருபத்தின் அடிப்படையில் நியமனம் செய்வதற்குரிய அங்கீகாரத்தை உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பெற்று நியமனம் செய்தல் வேண்டும் எனவும், மருதனார்மடச் சந்தையில் தரகர்களின் ஆட்டூழியத்தை ஒழித்துக்கட்ட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும், சபை எல்லைக்குள் இருக்கும் வண்டிகள் வாகன சொந்தக்காரர் அனைவரும் அவ்வவ் வாகனங்களின் வரியை ஆண்டுதோறும் செலுத்தும் வரியை உடுவில் கிராமசபைக்கே செலுத்தவேண்டுமென்றும், எல்லைப்புறங்களிலுள்ள ஏனைய உள்ளூராட்சி சபையில் செலுத்த முனைந்தால் அச்சபைகள் அதனை ஏற்றுக்கொள்ளக்கூடாதென எல்லைப்புற உள்ளூராட்சி சபைகளுக்கு உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் வேண்டுகோள் விடுப்பதென்றும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

---

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## வெள்ளி 8—11—68

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீ அல் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-30 பண்ணுரித்தமிழ், 8-00 குரான், 8-15 இன்னிசை மிகைநிகள்.

344 மீ அல் 49 மீ

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்வேட்டை.

344 மீ அல் 61 மீ

மாலை 5-00 பிறந்தநின வாழ்த்துக்கள், 5-30 வானமஞ்சரி.

இரவு 6-15 பஜனை, 6-45 பாவளம், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 விவாத மேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக் கச்சேரி.

# அடுத்தஆண்டில் இடமாற்றம்

புலோலி, வியாழன்

வடமராட்சியிலுள்ள கிராம சேவையாளர்களில் பெரும்பாலானவர்கள் அடுத்த ஆண்டில் இடமாற்றத்துக்குள்ளாவார்களெனத் தெரியவருகிறது. தொடர்ந்து 4 வருடகாலம் சேவையாற்றிய வர்களையே இடமாற்றம் செய்ய உள்நாட்டமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுப் போட்டி

# திருமலை ஸ்ரீசண்முகவித்தியாலய மாணவிகளின் சாதனை

— நமது திருக்கோணமலை நிருபர் —

திருக்கோணமலை மக்கெய்ஸர் சுற்றுமதில் விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற இரேஷ்ட பிரிவினரின் விளையாட்டுப் போட்டிகளில் பெண்கள் பகுதியில் ஸ்ரீ சண்முக வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றுச் சாம்பியனாகியது. விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. எஸ். டி. இருபைநாயகத்தினால் இப்போட்டிகள் மிகவும் திறமையாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சோம பாலகுணதிலக பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு திருமதி குணதிலக பரிசில்களை வழங்கினார்.

போட்டி முடிவுகளின் விபரம் வருமாறு:-

5000 மீட்டர் ஓட்டம்:
கே. எஸ். தயானந்தா-தரைப்படை ஷெல்றேக், எச். டி. பி. எஸ். சமரநாயக்கா தரைப்படை ஷெல்றேக், கே. நாகேந்திரன்-திருமலை யுனைட்டட் விளையாட்டுக்கழகம்.

சட்டி எறிதல்:
ஆர். ஜி. புல்நர்-திருமலை யுனைட்டட் விளையாட்டுக்கழகம், பி. கனகரத்தினம்-றோயல் இலங்கை ஆகாய விமானப்படை, ஏ.கே. அலிமுகம்மது-கிண்ணியா விளையாட்டுக்கழகம்.

1500 மீட்டர்:
கே. எஸ். தயானந்தா-தரைப்படை ஷெல்றேக், எம். தில்லைநாதன்-திருமலை, கே. நாகேந்திரன்- திருமலை யுனைட்டட் விளையாட்டுக்கழகம்.

சம்மட்டிவீசுதல்;
ஏ.ஜே. றெட்றிகோ-றோயல் விமானப்படை, எம். இன்னத்துரை - தரைப்படை செல்றேக், இ. கனகலிங்கம்-இந்துக்கல்லூரி.

800 மீட்டர்:
எஸ். தில்லைநாதன்-திருமலை, எம்.ஏச். எவ். லாப்-றோயல்விமானப்படை.

100 மீட்டர்:
ஆர்.டபிள்யூ. ஜயசூரியா-றோயல்விமானப்படை, பி. என். இரத்தினசிங்கம்- திருமலை யுனைட்டட் விளையாட்டுக்கழகம், டபிள்யு. பெர்னாண்டோ- றோ.வி.ப.

200மீட்டர்;
ஆர் டபிள்யு. ஜயசூரியா-றோ.வி.ப. பி.என்.இரத்தினசிங்கம்-தி.யு.வி.க. எம்.ஏ. எம். இரத்நாயக்கா-றோ.வி.ப.

கெந்திப்பாய்தல்:
எம். ஏ. எம். இரத்நாயக்கா-றோ.வி.ப. என். சிவசுப்பிரமணியம்- தி.யு.வி.க. எஸ்.வரதன்-கிண்ணியா வி.க.

நீளம் பாய்தல்:
என். சிவசுப்பிரமணியம்-தி.யு.வி.க., எஸ். றேச்-றோ.வி.ப.

400 மீட்டர்:
ஆர். டபிள்யு. ஜயசூரியா-றோ.வி.ப. சி.எம்.நாணயக்கார-றோ.வி.ப. ஆர்.ரங்கநாதன்-திருமலை.

பெண்கள்

100 மீட்டர்: எஸ். அற்புதரஞ்சிதம், எஸ். தேவமணி, எஸ். வள்ளிநாயகி.

200 மீட்டர்ஸ்: எஸ். அற்புதரஞ்சிதம், எஸ். வள்ளிநாயகி, எஸ். யுனிமகேஸ்.

சட்டி எறிதல்: எஸ். ஜெகதாம்பிகை, எஸ். செல்வராணி, எஸ். யுனிமகேஸ்.

நீளம்பாய்தல்: எஸ். இமசலாஜனி, எஸ். வள்ளிநாயகி, எஸ். அருணாந்தி.

குண்டெறிதல்: பி. தேவநாயகம், எஸ். தேவமணி, கே. வினிதா.

உயரம்பாய்தல்: எஸ். அற்புதரஞ்சிதம், எஸ். தேவமணி, பி. தேவநேசம்.

4X100 மீட்டர் அஞ்சல் ஓட்டம், 4X200 மீட்டர் அஞ்சல் ஓட்டம்: எல்லோரும் ஸ்ரீ சண்முகவித்தியாலயத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆண்கள்

அஞ்சல்ஓட்டம்: அர்ச். சூசையப்பர்கல்லூரி, கிண்ணியா மகாவித்தியாலயம், இந்துக்கல்லூரி.

## வெற்றி தோல்வி இல்லை

அல்லைப்பிட்டி, வியாழம்.
பாடசாலை விளையாட்டுச்சபை ஆதரவில் வேலணை மத்தியகல்லூரி 2ம் பிரிவுக் கோஷ்டிக்கும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய 2ம் பிரிவுக் கோஷ்டிக்குமிடையே வேலணை மத்திய கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரு கோஷ்டியினரும் மிகவும் பாராட்டத்தக்க முறையில் விளையாடி 1—1 கோலைப் பெற்று வெற்றி தோல்வியின்றி ஆட்டம் முடிவடைந்தது. இப்போட்டிக்கு தீவுப்பகுதி போதனாசிரியர் பி. பொன்னுச்சாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## கும்பாபிஷேகம்

நல்லூர், வியா.
இணுவில் அம்பலவாணர் கந்தசுவாமி கோவிலில் சென்ற முதலாம் திகதி காலையில் சண்டேசுவர மூர்த்தி பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் நடைபெற்றது.

## 38 வருட சேவை

புத்தூர், வியாழன்.
அச்சுவேலி ஸ்ரேஷன் பாடசாலையில் ஆசிரியையாகப் பணியாற்றி வரும் திருமதி சங்குப்பிள்ளை 38 வருட கால சேவையின் பின் இம்மாதம் 18-ம் திகதி ஓய்வுபெறவிருக்கிறார். இவர் 15 பாடசாலைகளில் சேவை செய்துள்ளார்.


இவரது 60 ஆண்டுப் பூர்த்தியைக் கொண்டாட இம்மாதம் 17-ம் திகதி ஸ்ரேஷன் பாடசாலை பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒழுங்குகள் மேற்கொண்டுவருகின்றனர்.

## குழந்தைகளுக்கு பால் இல்லை

புத்தூர், வியா.
சுமார் இரண்டுமாத காலமாக புத்தூர், இடைக்காடு, அச்சுவேலி, ஆவரங்கால், நத்தைமேனி, வலலாய் முதலிய இடங்களிலுள்ள பால் விநியோக நிலையங்களில் குழந்தைகளுக்கு வழங்கப்படவேண்டிய பால் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இங்குள்ள ஏழைக்குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பால் விநியோகிக்கும் ஒப்பந்தகாரர்களின் இவர் பால் விநியோகிக்க மறுப்பதினாலேயே இவ்விதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.


ட்ராக்டர் ஒன்றை வாங்கும்போது வெகு விழிப்பாயிருங்கள்!



✓ அந்த ட்ராக்டர் இலங்கையில் பரீட்சிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதா?
✓ நாடு முழுதும் விற்பனைக்குப் பிற்பட்ட பராமரிப்புச் சேவை கிடைக்குமா?
✓ அசல் மாற்றுறுப்புக்கள் உடனே கிடைக்குமா?
✓ பல பணிபுரியும் ட்ராக்டரா?
✓ எந்த வேலையையும் மேற்கொள்ளத் தக்க பலதரப்பட்ட துணை உறுப்புக்கள் கொண்டதா?
✓ அதனை விற்பனை செய்யும் கம்பனி எவ்வளவு நம்பிக்கையானது?

மஸி - பெர்குசன் மட்டுமே பரிபூரண பதில் தரவல்லது.

நீங்கள் விழிப்பாயிருக்க விரும்பினால் இதனை வெட்டி எடுத்து -

பிரவுண் அன்ட் கம்பனி லிமிட்டெட்
கமத்தொழிற் பிரிவு, த.பெ. 290, கொழும்பு.
என்னும் முகவரிக்கு அனுப்புக.
மஸி பேர்குசன் ட்ராக்டர்கள் பற்றிய விவரங்களும் துண்டுப் பிரசுரங்களும் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.
உங்கள் பெயர்:......................................
முகவரி:......................................
......................................
நீங்கள் நாட்டம் கொண்டுள்ள உபகரணம் எது?
......................................

பிரவுண் அன்ட் கம்பனி லிமிட்டெட்
விவசாயப் பிரிவு
தேவநம்பியதிஸ்ஸ றோட்,
கொழும்பு 10.
தொலைபேசி: 93097

8C/396


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

